


தூத்துக்குடி மாவட்டம் அரசு தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நேற்று முன்தினம் (13.05.2025), மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற அரசு விழாவில், தூத்துக்குடி மாவட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் ரூ.19.23 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள 23 மருத்துவக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.10.65 கோடி செலவில் 4 புதிய மருத்துவ கட்டடங்கள் மற்றும் 1 காந்த அதிர்வலை வரைவு உபகரணத்தை (MRI SCAN) பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர்கள் திருமதி பி.கீதா ஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மா. சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் தலைமையில் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா (ஓட்டப்பிடாரம்), ஜி.வி.மார்க்கண்டேயன் (விளாத்திக்குளம்), மேயர் பெ.ஜெகன் அவர்கள், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் லி.மதுபாலன், துணை மேயர் செ.ஜெனிட்டா, தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.சிவகுமார், மாவட்ட சுகாதார அலுவலர்கள் மரு.யாழினி (தூத்துக்குடி), மரு.வித்யா (கோவில்பட்டி) உட்பட அரசு அலுவலர்கள், மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!

கன்னியாகுமரி, மே.15-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட மற்றும் நாகர்கோவில் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் (13.05.2025 - செவ்வாய்க் கிழமை) அன்று மாலை 6.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜரெத்தினம் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், துணை செயலாளர்கள் பூதலிங்கம் பிள்ளை, கரோலின் ஆலிவர்தாஸ், குளச்சல் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் விஜய கதிரவன், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.மதியழகன், பா.பாபு, த.செல்வன், ஆ.லிவிங்ஸ்டன், பி.எஸ்.பி. சந்திராக, நகர கழக செயலாளர் குமரி ஸ்டீபன், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த்,

பகுதி செயலாளர்கள் இ.ஜவகர், த.ஜீவா, என்.பி.துரை, எம்.சேக்மீரான் உட்பட பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட மற்றும் நாகர்கோவில் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 4 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் ஒன்றியம், நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## செயலாளர் டாக்டர் அ.சுபேர் கான் அறிவிப்பு!

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவில் ஒன்றியம், நகரம், பேரூர் கழகம் உள்ளிட்ட அமைப்புகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகிகள் அறிமுகக்கூட்டம், மாவட்டக் கழகச் செயலாளர் மற்றும் ஒன்றிய - நகர பேரூர் கழகச் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெறவுள்ளது. எனவே புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அறிமுகக் கூட்ட விவரம்.

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 16.05.2025 வெள்ளிக்கிழமை | காலை 9:00 மணி | விருதுநகர் வடக்கு மாவட்டம். | இராஜாமணி அம்மாள் திருமண மண்டபம் - மல்லாங்கிணறு. |
| | மாலை 4:00 மணி | தென்காசி வடக்கு மற்றும் தென்காசி தெற்கு மாவட்டம். | தென்காசி தெற்கு மாவட்ட கழக அலுவலகம். கலைஞர் அரங்கம். சிவந்திநகர். குத்துக்கல் வலசை. தென்காசி. |

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர் - கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

யாரைப் பாதுகாக்க நினைத்தார்களோ அவர்களுக்குத் தண்டனை!

# பொள்ளாச்சி பாலியல் வழக்கில் தலைகுனிந்து நிற்கும் அ.தி.மு.க.வினர்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

**சென்னை, மே 15 -**

**பொள்ளாச்சி பாலியல் வழக்கில் யாரை பாதுகாக்க வேண்டும் என நினைத்தார்களோ அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே அ.தி.மு.க.வினர்தான் தலைகுனிந்து நிற்கிறார்கள் என தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான திருமதி கனிமொழி கருணாநிதி அவர்கள் நேற்று முன்தினம் (13.05.2025) தூத்துக்குடியில் செய்தியாளர்கள் சந்திப்பில் குறிப்பிட்டார்.**



இது குறித்து கனிமொழி கருணாநிதி அவர்கள் கூறியதாவது:-

பொள்ளாச்சியில் பெண்களுக்கு எதிராக நடந்த வன்முறைகள், பாலியல் கொடுமைகள் அனைத்தும் நம் மனதில் நீங்காத காயமாக உள்ளன. பொள்ளாச்சி பாலியல் வழக்கில் வழங்கப்பட்டுள்ள இன்றைய தீர்ப்பு, அந்த காயத்திற்கு மருந்தாகவும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதியாகவும், குற்றவாளி களுக்குச் சரியான தண்டனையாகவும் உள்ளது.

**பெண்களுக்கு நம்பிக்கை தரும் தீர்ப்பு!**

பாதிக்கப்பட்ட பெண்களின் பெயர்கள் வெளியிடாமல் பாதுகாக்கப்பட்டு உள்ளது. அவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் உத்தரவிடப்பட்டு உள்ளது. பாதிக்கப்படக் கூடிய அனைத்து பெண்களுக்கும் நம்பிக்கை தரும் வகையில் இந்தத் தீர்ப்பு உள்ளது.

குறிப்பாக, தாங்கள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டாலோ, தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்து வெளியே பேசினால் நிச்சயம் நியாயம் கிடைக்கும் என்ற வகையில் தீர்ப்பு அமைந்துள்ளது.

**அ.தி.மு.க. ஆட்சியில் வழக்கை விசாரிக்க முடியாத நிலை!**

பொள்ளாச்சி பாலியல் சம்பவத்தில் நடந்த குற்றத்தை விசாரிக்க முடியாத நிலைதான் அன்றைய அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தது. குற்றவாளிகளைப் பாதுகாப்பதில் மட்டுமே அவர்கள் கவனம் இருந்தது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் பலர் அ.தி.மு.க.வினராக இருப்பதால் பாதுகாக்கும் வேலையில் ஈடுபட்டனர்.

தி.மு.க.வும் மற்ற எதிர்கட்சிகளும் ஊடகங்களும் நீதிக்காகப் போராடின. இதற்கடுத்தே, இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்ய முன்வந்தார்கள். இந்த விவகாரம் தொடர்பாக அன்றைக்கு தி.மு.க. மகளிரணி சார்பில் போராட்டம் அறிவிக்கப்பட்டது.

அப்போது போராட்டம் நடக்கும் இடத்திற்கு நான் செல்லக்கூட அனுமதிக்கவில்லை. பின்பு அனுமதிக்காக ஒரு தர்ணா போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. அந்த அளவுக்கு குற்றவாளிகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தினார்கள்.

**தி.மு.க. வற்புறுத்தலால் வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது!**

அன்றைக்கு எதிர்கட்சித் தலைவராக இருந்த நமது முதலமைச்சரும் பிற எதிர்கட்சிகளும் என அனைத்து தரப்பிலும் வலியுறுத்திய காரணத்தினால்தான், பின்னர் பொள்ளாச்சி வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு இதில் நியாயம் கிடைக்கும் என முதலமைச்சர் அவர்கள் அப்போது உறுதி அளித்து இருந்தார்கள். அந்த வாக்குறுதி, இன்று நிறைவேற்றிய நாளாக பார்க்கிறேன்.

தி.மு.க. ஆட்சியின் மீது இன்று மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. குற்றம் நடக்கும் பட்சத்தில் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே முதல்வரது ஆணை.

**நியாயம் கிடைக்க உறுதியாக இருக்கும் முதல்வர்!**

தமிழ்நாட்டில் குற்றங்கள் நடைபெறக்கூடாது என்பதில் திராவிட மாடல் ஆட்சி உறுதியாக இருக்கிறது. ஒருவேளை சில குற்றங்கள் நடைபெற்று விட்டால், பாதிக்கக் கூடியவருக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதில் முதலமைச்சர் மிகவும் உறுதியாக இருக்கிறார். யாரை பாதுகாக்க வேண்டும் என நினைத்தார்களோ அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே அ.தி.மு.க. வினர்தான் தலைகுனிந்து நிற்கிறார்கள். அ.தி.மு.க. கூட்டணியில் இருக்கும் பா.ஜ.க. மத்தியில் ஆளும் நிலையில், இன்றைக்குத் தமிழ்நாடு பெண்களுக்கு பாது காப்பான மாநிலமாக விளங்குகிறது என்பதை தேசிய குற்ற ஆவண காப்பகம் சார்பில் வெளியிட்டு இருக்கிறார்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள். தெரிவித்தார்.



திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்று கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர்களை வழிநடத்தும் செயல் திறமையை கருத்தில் கொண்டும் தென்காசி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் தென்காசி தெற்கு மாவட்டச் செயலாளர் வே.ஜெயபாலன்,மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா ஆகியோர் முன்னிலையில் மேலகரம் நன்னகரம் பகுதி மாற்றுக் கட்சி இளைஞர்கள் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். கழகத்தில் இணைந்த இளைஞர் களுக்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் கழக இரு வண்ண சால்வை அணிவித்து வரவேற்றார். உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா,துணை அமைப்பாளர் கள் சிவகுமார்,அப்துல் ரஹீம், சுப்பிரமணியன்,ராஜ், ஐவேந்திரன் தினேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட மற்றும் நாகர்கோவில் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரெத்தினம் தலைமையில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார். கூட்டத்தில் ஜெ.ஹெலன் டேவிட்சன், ஐ.கேட்சன், பூதலிங்கம்பிள்ளை, கரோலின் ஆலிவர்தாஸ், விஜய கதிரவன், எம்.மதியழகன், பா.பாபு, த.செல்வன், ஆ.லிவிங்ஸ்டன், பி.எஸ்.பி.சந்திராக, குமரி ஸ்டீபன், வழக்கறிஞர் ப.ஆனந்த், இ.ஜவகர், த.ஜீவா, என்.பி.துரை, எம்.சேக்மீரான் உட்பட பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட மற்றும் நாகர்கோவில் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 4 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் தெற்கு நகர சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் கம்பம் பார்க் திடலில் தெற்கு நகர அவை தலைவர் ராஜன் தலைமையில் நடைபெற்றது. தெற்கு நகர பொறுப்பாளர் பால்பாண்டி ராஜா வரவேற்புரை ஆற்றினார். தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தலைமைக் கழக பேச்சாளர் திக்கனல் தியாகு, கொள்கை பரப்பு துணை செயலாளர் பாண்டியன், ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். தலைமைச் செயற்குழு உறுப்பினர் குருகுமரன், வடக்கு நகர செயலாளர் வீரபாண்டியன், தெற்கு நகர துணை செயலாளர் செல்வம் நன்றி உரை ஆற்றினார். மற்றும் நகர நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புலவர் ஆடலரசு
### மே 15 (2007)



பொதுக்கூட்ட மேடைகளைப் பட்டிமன்றமாக – கவியரங்கமாக – வழக்காடு மன்றமாக மாற்றி பல்வேறு கோணங்களில் கழக கொள்கைகளை நாட்டு மக்கள் ஏற்கும் வண்ணம் நகரங்களிலும், குறிப்பாக கிராம.ப்புறங்களிலும் ஆற்றலோடு உரையாற்றியவர்.

கழகக் கொள்கைகளைப் பரப்பும் முகத்தான் “தியாகம்” எனும் தலைப்பில் நாடகம் இயற்றி தாமே அதில் நடித்தவர்.

கழகம் நடத்திய போராட்டத்தில் ஈடுபட்டு காவல்துறையால் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

1997ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும்விழாவில் தலைமைக் கழகச் சார்பில், தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு “கலைஞர் விருது” வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.